Australian Government
Department of Home Affairs

**இப்பக்கத்திலுள்ள தகவல்கள் ஓர் அங்கீகரிக்கப்பட்ட மாணவர் வருகைத் திட்டத்திற் பங்குபற்றும் சர்வதேச மாணவருக்கு மாத்திரமாகும்.** இவை மாணவர் விசாக்கள், மாணாக்கருக்கான கோவிட்-19 நடவடிக்கைகள் அல்லது நியமப் பயண விதிவிலக்குகளும் மட்டுப்பாடுகளும் தொடர்பாகக் கிடைக்கப் பெறும் தகவல்களை மாற்றிடுவதில்லை.

அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச மாணவர் வருகைத் திட்டத்தின் கீழ் உங்களது கல்வி நிறுவனம் உங்களைப் பரிந்துரைத்தால் நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குத் திரும்ப இயலுமாகலாம்.

# மாணவர்களைப் பரிந்துரைத்தல்

சர்வதேச மாணவர் வருகைத் திட்டத்தின் கீழ் பங்குபற்றக் கூடிய கல்வி நிறுவனங்களையும் மாணவர்களையும் தீர்மானிக்கும் உரிமை மாநில, ஆட்புல அரசாங்கங்களுக்கு உள்ளது. நாடு திரும்பும் மாணவர்களுக்கான பயண, தனிமைப்படுத்தல் ஏற்பாடுகளும் இதில் அடங்கும்.

அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலியாவுக்குத் திரும்பத் தகுதியான சர்வதேச மாணவர்களை அவர்களது கல்வி நிறுவனங்களே அடையாளம் காணும். மேலதிக தகவல்களை அறிந்து கொள்ளவும் சர்வதேச மாணவர் வருகைத் திட்டத்தின் கீழ் நீங்கள் இணைத்துக் கொள்ளப்படலாமா என்பதைப் பற்றிக் கலந்தாலோசிக்கவும் நீங்கள் உங்கள் கல்வி வழங்குநரைத் தொடர்பு கொள்ள வேண்டும். உங்கள் கல்வி வழங்குநர் உங்களுக்கு மேலதிக ஆலோசனைகளை வழங்குவார்.

பங்குபற்றும் மாணவர்களுக்கு அப்போதும் அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்வதற்கான ஒரு பயண விதிவிலக்கு தேவைப்படும். தொடர்புள்ள மாநில அல்லது ஆட்புல அரசாங்கம் உங்கள் சார்பாக இவ்விதிவிலக்குக்கு விண்ணப்பிக்கும். பயண விதிவிலக்கு அங்கீகரிக்கப்பட்டதும் உங்களது நிறுவனம் பயண ஏற்பாடுகளைப் பற்றி ஆலோசனை வழங்கும். உங்களது கல்வி நிறுவனத்தால் உங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தாலே தவிர, நீங்கள் ஒரு தனிப்பட்ட பயண விதிவிலக்குக்காக

விண்ணப்பிக்கவோ ஒரு சர்வதேச மாணவர் வருகைத் திட்டத்திற் பங்குபற்ற அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்ய ஏற்பாடுகளைச் செய்யவோ கூடாது.

## விசாக்கள்

ஒரு சர்வதேச மாணவர் வருகை திட்டத்திற் பங்குபற்ற நீங்கள் செல்லுபடியாகும் மாணவர் )துணை வகுப்பு 500) விசாவை வைத்திருக்க வேண்டும். மாணவர் விசாக்களுக்கு முன்னுரிமை வழங்கும் செயன்முறையை, வருகைக்கான செயன்முறையின் ஒரு பகுதியாகத் திணைக்களம் முன்னெடுக்க இயலாது. தற்போதைய செயலாக்க நேரங்கள் தொடர்பாக அறிய எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய குறைந்தபட்ச விசா செல்லுபடியென எதுவும் இல்லை என்றாலும், நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குத் திரும்ப உங்கள் பயணத்தில் தாமதங்கள் ஏற்படும் போது அவற்றை ஈடு செய்யுமளவுக்கு உங்கள் விவிசாவில் போதிய காலம் இருத்தல் வேண்டும். நீங்கள் உங்களது திட்டமிடப்பட்ட விமானப் பயணத்தில் விவிசா இல்லாமல் பயணம் செய்ய முடியாது.

உங்கள் விசா விவரங்களை சரிபார்க்க, விசா தகுதி காணப்பட்டதை இணையத்தின் மூலம் சரிபார்த்தல் (Visa Entitlement Verification Online (VEVO)) என்பதைப் பார்வையிடுங்கள்.

தற்போதைய மாணவர் விசாவில் நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்தும் வெளிநாட்டில் இருக்கும் போது ஒரு புதிய விசாவுக்கு விண்ணப்பம் செய்தும் அதைப் பற்றி இன்னும் முடிவுகள் எட்டப்படாமலும் இருந்தால், நீங்கள் ImmiAccount வழியாக இணைப்பு விசா A (Bridging visa A) என்பதற்கு விண்ணப்பிக்கலாம்.

அதன்மேலும் மாணவர் விசாவிற்கு அவுஸ்திரேலியாவில் நீங்கள் விண்ணப்பிக்க விரும்பினால், நீங்கள் நிலையான தகுதித் தேவைகளை (eligibility requirements) நிறைவு செய்ய வேண்டும். நீங்கள் ImmiAccount மூலம் புதிய மாணவர் விசாவுக்கு விண்ணப்பிக்கலாம்.

## பயண விலக்குகள்

அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச மாணவர் வருகைத் திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலியாவுக்குத் திரும்பப் பரிந்துரைக்கப்பட்ட சர்வதேச மாணவர்களுக்கு அவுஸ்திரேலியாவில் அமுலிலுள்ள பயணக் கட்டுப்பாடுகளிலிருந்து சலுகை அளிக்கப்பட்டதாகக் கருத வேண்டாம்.

அவுஸ்திரேலியாவுக்குப் பயணிக்க உங்களை அனுமதிப்பதற்கு உங்களுக்கு ஒரு பயண விலக்குத் தேவைப்படும். நீங்கள் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தால் தொடர்புள்ள மாநில அல்லது ஆட்புல அரசாங்கம் ஒரு பயண விதிவிலக்குக்காக உங்கள் சார்பாக விண்ணப்பிக்கும்.

அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச மாணவர் வருகைத் திட்டங்கள் தொடர்பான பயண விதிவிலக்குகளுக்கான செயன்முறைகளைப் பற்றி மேலும் விபரங்கள் தேவைக்கேற்றவாறு கிடைக்கச் செய்யப்படும். ஆலோசனை வழங்கப்பட்டாலன்றி ஒரு உள்வருகைப் பயண விதிவிலக்குக்காக விண்ணப்பிக்க வேண்டாம்.

## அவுஸ்திரேலியப் பயணப் பிரகடனம்

நீங்கள் அவுஸ்திரேலியாவுக்கு புறப்படுவதற்குக் குறைந்தபட்சம் 72 மணி நேரத்திற்கு முன்னதாக இணையத்தின் மூலம் அவுஸ்திரேலியப் பயணப் பிரகடனத்தை (Australian Travel Declaration) நிரப்ப வேண்டும்.

அவுஸ்திரேலியப் பயணப் பிரகடனம் அவுஸ்திரேலியாவில் உங்கள் தொடர்பு விபரங்கள், விமான விபரங்கள், தனிமைப்படுத்தல் தேவைகள், சுகாதார நிலை ஆகியவற்றைச் சேகரிக்கும்.

பிரகடனம் நிரப்பப்பட்ட பின்னர், நீங்கள் விமானத்தில் ஏற முன்னரும், அவுஸ்திரேலியாவுக்கு வந்தடைந்த பின்னரும் நீங்கள் காட்டக்கூடிய விபரங்களைக் கொண்ட மின்னஞ்சலை (இலத்திரனியல் முறையிலோ அச்சிட்டோ) நீங்கள் பெறுவீர்கள்.

## விசா நிபந்தனைகள்

உங்கள் கல்விக் காலத்தின் போது ஏற்படும் செலவுகளைப் பூர்த்தி செய்யப் போதுமான நிதி உங்களிடம் இருக்க வேண்டும். நீங்கள் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவிக்குத் தகுதி பெற மாட்டீர்கள்.

தற்போதைய பொருளாதார சூழ்நிலைகளின் கீழ் அவுஸ்திரேலியாவில் பகுதிநேர வேலைகளில் ஈடுபடுவது உங்களுக்கு கடினமாக இருக்கலாம். உங்கள் விசா தொடர்பான நிபந்தனைகளை (conditions related to your visa) நீங்கள் விளங்கியிருப்பது முக்கியம்.

நீங்கள் நீங்களும் உங்களுடன் பயணம் செய்யும் குடும்ப உறுப்பினர்களும் அவுஸ்திரேலியாவில் தங்கியிருக்கும் காலத்துக்குப் போதிய சுகாதாரக் காப்புறுதியை

(adequate health insurance) வைத்திருக்க வேண்டும். மாணவர்கள் விதிவிலக்கு (exception) தமக்குச் செல்லுபடியாகாத சந்தர்ப்பத்தில், அங்கீகரிக்கப்பட்ட அவுஸ்திரேலியச் சுகாதார காப்புறுதி வழங்குநரிடமிருந்து சர்வதேச மாணவர் சுகாதாரக் காப்புறுதியைப் (Overseas Student Health Cover (OSHC)) பெற்றிருக்க வேண்டும்.